**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

நாள் 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

இந்தியா, உலகிற்கே உணவு வழங்கும் நாடாக திகழ, மத்திய பட்ஜெட்டில் விவசாயத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் புதிதாக பொறுப்பேற்கவுள்ள அரசின் முதல் சட்டப்பேரவை அமர்வின்போது சிஏஜி அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தேசிய தலைநகர் டெல்லி பிராந்தியத்தின் 7ஆவது சட்டப்பேரவையை கலைத்து துணை நிலை ஆளுநர் திரு. வி.கே. சக்சேனா உத்தரவிட்டுள்ளார்.

சத்தீஷ்கர் மாநிலம் பீஜப்பூரில் பாதுகாப்பு படையினருடன் ஏற்பட்ட மோதலின்போது 31 நக்சலைட்டுகள் கொல்லப்பட்டுள்ளனர்.

எல். முருகன் 1- (20 )

மத்திய தகவல்-ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன், இன்று புதுச்சேரியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், மத்திய அரசின் பட்ஜெட் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். உலகத்திலேயே மீன் பொருட்கள், இறால் ஏற்றுமதியில் 2ஆம் இடத்தில் இந்தியா உள்ளதாகவும், உலகிற்கே உணவு வழங்கும் நாடாக இந்தியா திகழ, விவசாயத் துறையின்

மேம்பாட்டிற்காக மத்திய பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். கடந்த 10 ஆண்டுகால பிரதமர் திரு.நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியின்போது நாட்டிலுள்ள 25 கோடி பேர் வறுமையின் பிடியில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும், இங்கிலாந்தை பின்னுக்குத் தள்ளி, உலகின் 5ஆவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா முன்னேறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

புதுச்சேரி மாநில வளர்ச்சிக்கும், மக்களின் முன்னேற்றத்திற்குமான திட்டங்கள் மற்றும் அதற்கான நிதி பங்கீடுகள் குறித்தும் குறிப்பிட்ட டாக்டர் எல். முருகன், மத்திய பட்ஜெட்டில் புதுச்சேரிக்கு 3 ஆயிரத்து 432 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். ஜிப்மர் மருத்துவமனை உள்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்காக, 150 கோடி ரூபாய் உள்பட ஆயிரத்து 450 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எல். முருகன் 2- (18 )

விவசாயிகளுக்கான கிசான் கடன் அட்டைகளின் வாயிலான அதிகபட்ச கடன் தொகை 3 லட்சம் ரூபாயில் இருந்து 5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் 16 ஆயிரம் புதுச்சேரி விவசாயிகள் நேரடியாக பயனடைவார்கள் என்றும் தெரிவித்தார். ஆதி திராவிடர் மற்றும் மீனவர் சமுதாய மக்கள் பயனடையும் வகையில் நிதி ஒதுக்கப்பட்டு சிறந்த முறையில் பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், புதுச்சேரி கிராமப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாரத் நெட் முன்னெடுப்பு மூலம் 24 மணி நேரமும் இணைய வசதிகளைப் பெற நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

புதுச்சேரி மாநிலத்தில் தற்போது 17 அடல் டிங்கரிங் ஆய்வுக் கூடங்கள் செயல்பாட்டில் உள்ள நிலையில், மாணவர்களை தொழில் முனைவோர்களாக மேம்படுத்த மேலும் 500 அடல் மையங்களை உருவாக்க உள்ளதாகவும் தெரிவித்தார். புதுச்சேரிக்கு பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதிகள் பற்றி, மேலும் தெரிவித்த மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல். முருகன் ..........

(வாய்ஸ் )

துணைநிலை ஆளுநர் திரு.கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு.ரங்கசாமி ஆகியோரை இன்று மரியாதை நிமித்தமாக டாக்டர் எல்.முருகன் சந்தித்துப் பேசினார்.

எல். முருகன் 3- (4 )

முன்னதாக, மத்திய அரசின் பத்மஸ்ரீ விருதுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள புதுச்சேரி தவில் இசைக் கலைஞர் திரு.தட்சணாமூர்த்திக்கு சால்வை அணிவித்து, வாழ்த்து தெரிவித்த மத்திய அமைச்சர், புதுச்சேரி மாநில பாரதீய ஜனதா கட்சி நிர்வாகிகளையும் சந்தித்து கலந்துரையாடினார்.

முர்மு பிரயாக்ராஜ் (9)

குடியரசு தலைவர் திருமதி முர்மு, நாளை உத்தரபிரதேச மாநிலம், பிரயாக்ராஜ் மஹா கும்பமேளாவில் கலந்துகொண்டு, கங்கை, யமுனை மற்றும் சரஸ்வதி நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் புனித நீராட உள்ளார். பிரயாக்ராஜில் உள்ள Akshayvat மற்றும் படே ஹனுமான் கோவில்களுக்குச் சென்று வழிபடும் குடியரசு தலைவர், மஹாகும்பமேளாவில் அமைக்கப்பட்டுள்ள டிஜிட்டல் அனுபவ மையத்தில் நவீன தொழில்நுட்பங்கள் மூலம் மஹாகும்பமேளா குறித்த தகவல்களை அறிந்து கொள்கிறார். இந்த நிகழ்ச்சிகளின் போது உத்தரபிரதேச மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் உடனிருப்பார்.

ஜல் ஜீவன் கும்பமேளா (12)

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில், மத்திய அரசால் கிராமப்புறங்களில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தும் விதத்தில் ஜல் ஜீவன் இயக்கத்தின் அரங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பிரதமரின் வீடு கட்டும் திட்டமான ஆவாஸ் யோஜனா, குழாய் மூலம் வீடுகளுக்கான நீர் விநியோகம், கிராமப் பஞ்சாயத்துகள் மேம்பாடு, கிராமப் பகுதிகளில் சூரிய சக்தியினால் ஆன மின் உற்பத்தி உள்ளிட்டவைகள் குறித்து இந்த ஜல் ஜீவன் அரங்கில் ஒலி-ஒளி காட்சிகள் மூலம் விளக்கப்படுகிறது. மேலும், உத்தரபிரதேச கிராம மக்கள் தங்களுடைய கிராமங்களில் மேற்கொள்ளப்படும் நீர் விநியோகம் குறித்த தற்போதைய

நிலவரங்களையும் அறிந்து கொள்ளும் வசதியும் செய்யப்பட்டுள்ளதாக எமது பிரயாக்ராஜ் ஆகாஷ்வாணி செய்தியாளர் தெரிவிக்கிறா◌ா◌.

பிரதமர் சிஏஜி (11)

புதுடெல்லியில் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் நடைபெறும் முதல் சட்டப்பேரவை கூட்டத் தொடரிலேயே, சென்ற ஆம் ஆத்மி அரசாங்கம் குறித்த தலைமை தணிக்கை அதிகாரியின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று டெல்லி மக்களுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார். நேற்று டெல்லி சட்டப்பேரவை தேர்தலுக்கான முடிவுகள் வெளியான பின்னர், கட்சியின் ஆதரவாளர்களுடன் பிஜேபி தலைமையகத்தில் உரையாற்றும் போது பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். கடந்த ஆம் ஆத்மி ஆட்சியின்போது அரசின் தவறான கலால் துறை கொள்கைகளால் சுமார் 2 ஆயிரத்து 26 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தலைமை தணிக்கை அதிகாரியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராஜிநாமா அதிஷி (16)

டெல்லி சட்டப்பேரவை தேர்தலில் ஆளும் ஆம் ஆத்மி கட்சி தோல்வி அடைந்ததை ஒட்டி முதலமைச்சர் திருமதி அதிஷீ தமது பதவியை ராஜிநாமா செய்துள்ளார்.

இம்மாதம் 5ஆம் தேதி நடைபெற்ற டெல்லி சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நேற்று நடைபெற்றது. மொத்தம் உள்ள 70 தொகுதிகளில் 48 தொகுதிகளில் வெற்றி பெற்ற பாரதீய ஜனதா கட்சி, பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க உள்ளது. ஆளும் ஆம் ஆத்மி கட்சிக்கு 22 இடங்களே கிடைத்துள்ளன. அந்த கட்சியின் நட்சத்திர வேட்பாளர்களான முன்னாள் முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால், முன்னாள் துணை முதலமைச்சர் திரு. மணீஷ் சிசோடியா உள்ளிட்டோர் தத்தம் தொகுதிகளில் தோல்வியுற்ற நிலையில், முதலமைச்சர் திருமதி அதிஷீ, கல்காஜி தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார்.

இந்நிலையில் இன்று காலை ராஜ்நிவாசில் துணைநிலை ஆளுநர் திரு. வி.கே. சக்சேனாவை சந்தித்து, தமது ராஜிநாமா கடிதத்தை திருமதி அதிஷீ வழங்கினார். இதனைத் தொடர்ந்து திரு. சக்சேனா தேசிய தலைநகர்

டெல்லி பிராந்தியத்தின் 7ஆவது சட்டப்பேரவையை கலைத்து உத்தரவிட்டார்.

## அஸ்வினி வைஷ்ணவ் (12)

மத்திய தகவல்-ஒலிபரப்பு மற்றும் ரயில்வே துறை அமைச்சர் திரு.அஸ்வினி வைஷ்ணவ் இன்று உத்தரபிரதேச மாநிலம் கோரக்பூர் ரயில் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு, கோரக்பூர் ரயில்வே சந்திப்புக்கான உத்தேச மாதிரி திட்டத்தை மறு ஆய்வு செய்தார். கோரக்பூரின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் விதத்தில் ரயில் நிலையத்திற்கான மாதிரி வடிவமைக்கப்பட்டுள்ளது குறித்து மத்திய அமைச்சர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

புதுப் பொலிவுடன் நவீன முறையில் மாற்றியமைக்கப்படும் இந்த ரயில் நிலையத்தின் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்த அமைச்சர், புதிய விமான முனையத்திற்கு அருகே, ஒரு புதிய ரயில் நிலையத்தை அமைக்கும் பணிகளுக்கான திட்டங்களை தயார் செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

## அமித்ஷா சத்தீஷ்கர் (13)

சத்தீஷ்கர் மாநிலத்தில் கூட்டுப் பாதுகாப்பு படையினருக்கும் நக்சலைட்டுகளுக்கும் இடையே ஏற்பட்ட சண்டையின் போது, வீரமரணம் அடைந்த 2 தியாகிகளின் குடும்பத்தினருக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தமது இரங்கலைத் தெரிவித்துள்ளார். நக்சலைட்டுகள் உடனான சண்டையின்போது வீரமரணம் அடைந்த இவ்விருவரின் தியாகத்திற்கு நாடு என்றென்றும் கடமைப்பட்டிருக்கும் என்று சமூக ஊடகப்பதிவு ஒன்றில் திரு. அமித்ஷா குறிப்பிட்டுள்ளார். சத்தீஷ்கர் மாநிலம் பீஜப்பூரில் இன்று அதிகாலை ஏற்பட்ட இந்த மோதலின் போது 31 நக்சலைட்டுகள் கொல்லப்பட்டதாகவும் பெரும் எண்ணிக்கையிலான ஆயுதங்களும், வெடி பொருட்களும், கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் தேதிக்குள் நாட்டிலிருந்து நக்சலைட்டுகள் முழுவதுமாக

அகற்றப்படுவார்கள் என்ற தமது கூற்றையும் மீண்டும் நினைவுபடுத்தியுள்ளார்.

டெல்லி - உலக புத்தக விழா (11)

புதுடெல்லி, பிரகதி மைதானம், பாரத் மண்டபத்தில் நடைபெறும் உலக புத்தகத் திருவிழா இன்றுடன் நிறைவு பெறுகிறது. இம்மாதம் 1ஆம் தேதி துவங்கிய இந்த 52ஆவது உலகப் புத்தக கண்காட்சியை குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு துவக்கி வைத்தார். தேசிய புத்தக நிறுவனம் மற்றும் இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த 9 நாள் புத்தக கண்காட்சியில், பிரான்ஸ், அர்ஜென்டினா, ஸ்பெயின், கொலம்பியா உள்ளிட்ட 50 நாடுகளைச் சேர்ந்த, சுமார் 2 ஆயிரம் புத்தக வெளியீட்டாளர்களும், ஆயிரம் பேச்சாளர்களும் பங்கேற்றுள்ளனர். இந்த உலக புத்தக திருவிழாவில் பல்வேறு எழுத்தாளர்களின் கலந்துரையாடல்களும், புத்தக வெளியீடுகளும், இலக்கிய மற்றும் கலாச்சார நிகழ்வுகளும் நடைபெற்றன.

கிரிக்கெட் (4)

இந்திய-இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கு இடையே இன்று ஒடிசா மாநிலம், கட்டாக்கில் நடைபெற்று வரும் 2ஆவது ஆடவர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், டாஸ் ஜெயித்து முதலில் ஆடிய இங்கிலாந்து அணி இந்திய அணிக்கு 305 ரன் எனும் வெற்றி இலக்கை நிர்ணயித்துள்ளது. முன்னதாக, இங்கிலாந்து அணி 49.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 304 ரன் எடுத்துள்ளது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

இந்தியா, உலகிற்கே உணவு வழங்கும் நாடாக திகழ, மத்திய பட்ஜெட்டில் விவசாயத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் புதிதாக பொறுப்பேற்கவுள்ள அரசின் முதல் சட்டப்பேரவை அமர்வின்போது சிஏஜி அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தேசிய தலைநகர் டெல்லி பிராந்தியத்தின் 7ஆவது சட்டப்பேரவையை கலைத்து துணை நிலை ஆளுநர் திரு. வி.கே. சக்சேனா உத்தரவிட்டுள்ளார்.

சத்தீஷ்கர் மாநிலம் பீஜப்பூரில் பாதுகாப்பு படையினருடன் ஏற்பட்ட மோதலின்போது 31 நக்சலைட்டுகள் கொல்லப்பட்டுள்ளனர்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.**